بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

## பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகத்துவமிக்க சஹாபாக்களான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) மற்றும் ஹஸ்ரத் குதாமா பின் மழ்வூன் (ரலி) அவர்களின் வாழ்க்கை வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 05 அக்டோபர் 2018 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பை எடுத்துக் கூறியிருந்தேன். அவர்களைப் பற்றி விடுபட்ட சில அறிவுப்புகளை நான் தற்போது எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களைப் பற்றி கண்ணியமிக்க சஹாபாக்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களது இறை நெருக்கம் மற்றும் அன்னாருக்கு இறைவனுடனான இருந்த தொடர்பானது மிக உயர்ந்த அந்தஸ்தை பெற்றிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த சஹாபாக்களின் நடைமுறையை தனது நடைமுறையாக ஆக்கிக் கொள்ளுமாறு கூறியிருந்தார்களோ அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் ஆகியோரைத் தவிர ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களின் வழிமுறையை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு அன்னார் மீது ஒரு குறிப்பான நம்பிக்கை இருந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் ஒரு வியக்கத்தக்க அன்பை கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருகாமையானது அன்னாரை இறையச்சமுடைய, தூய்மையான மற்றும் இறை வணக்கம் செய்யக்கூடிய மனிதராக ஆக்கி விட்டது. இறை வணக்கம் மற்றும் நவாஃபில் ஆகியவற்றில் எந்த அளவு ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்றால் கடமையான தொழுகை மற்றும் தஹஜ்ஜுத் தொழுகை மட்டுமின்றி சாஷ்த் நேரத் தொழுகையையும் அன்னார் முறையாக பேணி வந்தார்கள். ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமையன்று அன்னார் நஃபிலான நோன்பையும் நோற்று வந்தார்கள்.

தஹஜ்ஜுத் தொழுகையை தொழுவதற்காக உடலில் பலவீனம் உருவாகி விடுகின்றது. எனவேதான் குறைவாகவே நஃபிலான நோன்பை வைக்கின்றேன் என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களிடம் சொற்பொழிவாற்றுமாறு கூறினார்கள். அன்னார் இறைவனைப் புகழ்ந்து எடுத்துரைத்த பிறகு, மக்களே! அல்லாஹ் நமது இறைவனாவான். திருக்குர்ஆன் நமது வழிகாட்டியாகும். பைத்துல்லாஹ் நமது கிப்லாவாகும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் நமது நபியாவார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், இப்னு மஸ்வூது சரியாக கூறினார். உம்மத்திற்காக இப்ன மஸ்வூது எதை விரும்பினாரோ அதுவே எனக்கும் விருப்பமாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூஃபா சென்றபோது அன்னாரது சபையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களைப் பற்றி பேசப்பட்டது. அன்னார் இதற்கு முன்பு அங்கு இருந்துள்ளார்கள். மக்கள் அன்னாரைப் பற்றி புகழ்ந்து கூறியவாறு, அமீருல் முஃமினீன் அவர்களே! நாங்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களை விட மிக உயர்ந்த நல்லொழுக்கமுடைய மற்றும் மென்மையுடன் போதனை செய்யக்கூடிய, சிறந்த அருகாமையை கொண்டிருந்த மற்றும் இறைவனுக்கு அஞ்சக்கூடிய ஒருவரை பார்த்ததே கிடையாது என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அலி அவர்கள் (ரலி) அவர்கள், அல்லாஹ்வே! நீ சாட்சியாக இருப்பாயாக. அல்லாஹ்வே! இந்த மக்கள் எந்த கருத்தை கொண்டிருக்கின்றார்களோ நானும் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களைப் பற்றி இதே கருத்தை கொண்டவனாக இருக்கின்றேன். மாறாக, இதை விட மிகச்சிறந்த கருத்தை கொண்டுள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் தனது மார்க்க சகோதரரான, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் ஹஸ்ரத் சுபைர் பின் அல் அவாமுடன் ஏற்படுத்தப்பட்ட சகோதரத்துவ பந்தத்தின் உரிமையையும் சிறப்பாக நிறைவேற்றினார்கள். அவர்கள் மீது கொண்டிருந்த முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தியவாறு அன்னார் இவ்வாறு வஸிய்யத்தும் செய்தார்கள். அதாவது எனக்குப் பின்னால் நான் விட்டுச் செல்கின்ற அனைத்து சொத்துக்களையும் ஹஸ்ரத் சுபைர் பின் அல் அவாம் மற்றும் அவர்களது மகனான அப்துல்லாஹ் பின் சுபைர் ஆகியோர் கண்காணிப்பர். மேலும் குடும்ப விவகாரங்களில் இவர்களது முடிவே இறுதி முடிவாகவும் நடைமுறைப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் ரஸூலுக்கு கட்டுப்படுதல் தொடர்பாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

ஹதீஸில் ஒரு சம்பவம் வருகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சபையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அன்னார் வழிப்பாதையில் வந்து கொண்டிருக்கும் போது அன்னாரது காதுகளில் உட்காருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய சப்தம் கேட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஓசையை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கேட்டதும் அங்கேயே அமர்ந்து விட்டார்கள். எவ்வாறு குழந்தை உட்கார்ந்தவாறு தவழ்கின்றதோ அவ்வாறே அன்னாரும் உட்கார்ந்தவாறே பள்ளியை வந்தடைந்தார்கள்.

கட்டுப்படுதல் என்ற ஆன்மா தான் உலகத்திலுள்ள சமுதாயங்களை எவ்வாறு வெற்றி கொள்ளச் செய்கின்றது என்ற இந்த இரகசியத்தை புரியாத ஒருவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு நடந்து செல்வதைப் பார்த்து ஆட்சேபித்தார். மேலும் இது எத்தகைய முட்டாள்தனமான விஷயம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாயிலின் ஓரத்தில் நிற்கக் கூடியவர்களைத் தான் அமரும்படி கூறினார்கள். ஆனால் நீங்கள் வழிப்பாதையிலேயே அமர்ந்து விட்டீர்கள். தவழ்ந்தவாறு பள்ளிவாசலுக்கு வந்துள்ளீர்கள். நீங்கள் பள்ளிவாசலுக்கு வந்து அமர்ந்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் வழிப்பாதையிலேயே அமர்வதினால் என்ன பயன்? என்று கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள், நீங்கள் கூறுவது சரியாக இருக்கலாம். ஆனால் நான் பள்ளிவாசலை வந்தடைவதற்கு முன்பே மரணித்து விட்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இந்த கட்டளையை நான் செயல்படுத்த முடியாமல் போயிருக்கும். மேலும் நான் அமல் செய்ய முடியாத வகையில் ஒரு விஷயம் எஞ்சியிருந்திருக்கக்கூடும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களைப் பற்றி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது கிலாஃபத் காலகட்டத்தில் ஒரு முறை ஹஜ்ஜின் நாட்களில் மக்காவில் நான்கு ரக்அத்துகளை தொழுதார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்த போது இரண்டு ரக்அத்துகளை தான் அங்கு தொழுதார்கள். ஏனென்றால் பயணிகள் இரண்டு ரக்அத்துகளை தொழ வேண்டும் என்ற கட்டளையே உள்ளது. இதன் காரணமாக மக்களிடத்தில் கூச்சல் ஏற்பட்டது. ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சுன்னத்தை மாற்றி விட்டதாக மக்கள் கூச்சலிட்டனர். எனவே உஸ்மான் அவர்களிடத்தில் மக்கள் வந்து, நீங்கள் ஏன் நான்கு ரக்அத்துகளை தொழ வைத்தீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், நான் ஒரு முயற்சி செய்தேன். அந்த முயற்சி என்னவென்றால், இப்போது தொலை தூரத்திலுள்ள மக்கள் முஸ்லிமாகி விட்டனர். தொலை தூரத்திலுள்ள மக்கள் இப்போது ஹஜ்ஜிற்காகவும் வருகை தர ஆரம்பித்து விட்டனர். ஆரம்ப கால மக்களுக்கு எந்த அளவுக்கு இஸ்லாத்தின்

சட்ட திட்டங்கள் பற்றி தெரியுமோ அந்த அளவுக்கு தற்போதுள்ள மக்களுக்கு தெரியாது. இப்போது அவர்கள் நமது செயலை மட்டுமே பார்க்கின்றனர். நாம் என்ன செய்கின்றோம்? என்பதை மட்டுமே அவர்கள் பார்க்கின்றனர். பழைய முஸ்லிம்கள் செய்கின்ற பணிகளைப் போன்றே இவர்களும் செய்கின்றனர். மேலும் இதுவே இஸ்லாத்தின் கட்டளையாகும் என்றும் கூறுகின்றனர்.

இந்த மக்கள் மதீனாவுக்கு மிகக் குறைவாகவே வருகை தருகின்றனர். இவர்களுக்கு அங்கிருந்தவாறு நமது தொழுகைகளை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. எனவே ஹஜ்ஜின் போது நான் இரண்டு ரக்அத்துகளை தொழுது கஸர் செய்வதை இவர்கள் கண்டால் பிறகு தத்தமது இடங்களுக்குச் சென்று, கலீஃபா அவர்கள் இரண்டு ரக்அத்துகளை தொழ வைத்ததையே நாங்கள் கண்டோம். எனவே இரண்டு ரக்அத்துகளை தொழுவதே இஸ்லாத்தின் கட்டளையாகும் என்று கூறத் தொடங்கி விடுவர். மேலும் பயணத்தின் காரணமாக இரண்டு ரக்அத்துகள் தொழ வேண்டும் என்பதை அறியாத இம்மக்கள் தத்தமது இடங்களுக்குச் சென்று இவ்வாறு கூறினால் இஸ்லாத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விடும். மக்களுக்கு தடுமாற்றம் ஏற்பட்டு விடும்.

எனவே தொழுகையில் நான்கு ரக்அத்துகள் தொழப்பட வேண்டும் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் நான் நான்கு ரக்அத்துகளை தொழ வைக்க எண்ணினேன் என்று கூறினார்கள். நான் ஏன் நான்கு ரக்அத்துகளை தொழுதேன்? நான்கு ரக்அத்துகளை தொழுவது எனக்கு எவ்வாறு ஆகுமானதாகும் என்பதற்கு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: அதாவது நான் இங்கு திருமணம் செய்துள்ளேன். இதன் அடிப்படையில் மனைவியின் நாடும் தனது நாடாகவே இருக்கின்றது. எனவே நான் பயணி அல்ல. எனவே நான் தொழுகையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றே எண்ணுகின்றேன்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நான்கு ரகஅத்துகளை தொழ வைத்தற்கான காரணத்தையும் நோக்கத்தையும் கூறும் போது, வெளியிலிருந்து வந்த மக்களுக்கு தடுமாற்றம் ஏற்பட்டு விடக்கூடாது. அவர்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையை புரிவதில் தடுமாற்றம் ஏற்பட்டு விடக்கூடாது என்றே கூறினார்கள்.

அன்னாரது இந்த கூற்றும் மிகவும் நுட்பமான கூற்றாகும். சஹாபாக்கள் அன்னாரது இந்த கூற்றை செவியுற்றதும் பெரும்பாலான சஹாபாக்கள் அசல் விஷயத்தை புரிந்து கொண்டார்கள். சிலருக்கு புரியவில்லை. ஆனாலும் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். ஆனால் குழப்பம் விளைவித்தவர்கள் கூச்சலிட்டனர். அவர்கள் குழப்பவாதிகளாக இருந்தனர். குழப்பம் விளைவித்த அந்த மக்களில் சிலர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களிடமும் சென்று, இன்று என்ன நடந்தது என்று நீங்கள் பார்த்தீர்களா? நபி (ஸல்) அவர்கள் என்ன செய்தார்கள்? ஆனால் உஸ்மானோ இன்று என்ன செய்தார்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜின் நாட்களில் மக்காவில் இரண்டு ரக்அத்துகளை தொழ வைப்பார்கள். ஆனால் உஸ்மான் அவர்களோ நான்கு ரக்அத்துகளை தொழ வைத்தார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள், அவர்கள் கூறியதைக் கேட்டு விட்டு, பாருங்கள்! நமது வேலை குழப்பத்தை ஏற்படுத்துவதல்ல. ஏனென்றால் காலத்தின் கலீஃபா அவர்கள் ஏதாவதொரு ஞானத்தின் அடிப்படையிலேயே இப்படிப்பட்ட பணியை செய்திருப்பார்கள். ஏதோ ஹிக்மத் இருக்கும். ஆனால் அது நமக்கு புரியவில்லை. எனவே நீங்கள் குழப்பம் செய்யாதீர்கள் என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள், நானும் அவர்களுக்குப் பின்னால் நான்கு ரக்அத்துகளையே தொழுதேன். ஆனால் தொழுகைக்குப் பிறகு நான் கையை உயர்த்தி அல்லாஹ்விடம், இறைவா! இந்த நான்கு ரக்அத்துகளில் நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் நேர்ந்து தொழுத இரண்டு ரக்அத்துகளையே நீ ஏற்றுக் கொள்வாயாக. மீதமுள்ள இரண்டு ரக்அத்துகளை எனது தொழுகையாக நீ கருத வேண்டாம் என்று துஆ செய்தேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களிடம் அன்பின் எத்தகைய தோற்றம் காணப்பட்டது. அவர்கள் நான்கு ரக்அத்துகளை தொழுதார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் தொழ வைத்த இரண்டு ரக்அத்துகளின் கூலியை விட அதிகமான கூலியைப் பெற அவர்கள் விரும்பவில்லை. மேலும், எனது இரண்டு ரக்அத்துகளையே ஏற்றுக் கொள். நான்கையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று துஆவும் செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: பிறகு கிலாஃபத்திற்கு கட்டுப்படுவது தொடர்பாகவும் அவர்களிடம் மேலான முன்மாதிரிகள் காணக் கிடைக்கின்றன. ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் இரண்டு ரக்அத்துகளுக்குப் பகரமாக ஏன் நான்கு ரஅக்அத்துகளை தொழ வைத்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதன் விளைவாக அவர்கள் தொழுகையை விட்டு விடவில்லை. மாறாக, அவர்கள் தொழவும் செய்தார்கள். கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடக்கவும் செய்தார்கள். இதன் காரணமாகவே சஹாபாக்கள் முற்றிலும் படிப்பறிவற்றவர்களாக இருந்த போதிலும் முழு உலகிலும் அவர்கள் பிரபல்யமானார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக, இதுவே குழப்பங்களிலிருந்து தப்பிப்பதற்கான உண்மையான வழிமுறையாகும். இந்த நடைமுறை ஒவ்வொரு அஹ்மதிக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது.

ஒரு முறை ஹஸ்ரத் உமர் அவர்கள் இரவு நேரத்தில் ஒரு குழுவை சந்தித்தார்கள். இருளின் காரணமாக குழுவைச் சார்ந்தவர்களை காண முடியாமல் இருந்தது. அந்த குழுவில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த குழுவினரிடம், அவர்கள் எங்கிருந்து வந்துள்ளார்கள் என்று கேட்டு வருமாறு ஒருவரை அனுப்பினார்கள்.

அந்த நபர் கேட்டதற்கிணங்க, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள், فَجِّ العِمَيق அதாவது தொலை தூரத்திலிருந்து வந்துள்ளோம் என்று கூறினார்கள். பிறகு அந்த நபர் எங்கு செல்கின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் بَيتِ العَتِيق அதாவது இறை இல்லத்திற்குச் செல்கின்றோம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களில் அறிவு படைத்த ஒருவர் இருக்கின்றார் என்று கேட்டார்கள்.

பிறகு திருக்குர்ஆனின் மகத்துவமிக்க வசனம் எது? என சப்தமாக அவர்களிடம் கேளுங்கள் என்று ஒரு நபரிடம் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் ஆயத்துல் குர்ஸி என்று பதிலளித்தார்கள். பிறகு திருக்குர்ஆனின் உறுதியான வசனம் எது? எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள், إِنَّ ٱللَّهَ يَأۡمُرُ بِٱلۡعَدۡلِ وَٱلۡإِحۡسَٰنِ وَإِيتَآيِٕ ذِي ٱلۡقُرۡبَىٰ என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அந்த நபரிடம், திருக்குர்ஆனின் இரத்தினச் சுருக்கமான வசனம் எது? என கேளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அதாவது,, فَمَن يَعۡمَلۡ مِثۡقَالَ ذَرَّةٍ خَيۡرًا يَرَهُۥ وَمَن يَعۡمَلۡ مِثۡقَالَ ذَرَّةٖ شَرًّا يَرَهُۥ

பிறகு திருக்குர்ஆனின் அதிக எச்சரிகையூட்டக்கூடிய வசனம் எது? என்று கேட்கும்படி கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

لَّيۡسَ بِأَمَانِيِّكُمۡ وَلَآ أَمَانِيِّ أَهۡلِ ٱلۡكِتَٰبِۗ مَن يَعۡمَلۡ سُوٓءٗا يُجۡزَ بِهِۦ وَلَا يَجِدۡ لَهُۥ مِن دُونِ ٱللَّهِ وَلِيّٗا وَلَا نَصِيرٗا

பிறகு ஹஸ்ரம் உமர் ஃபாரூக் அவர்கள், திருக்குர்ஆனின் மிகவும் நம்பிக்கையை வலுவூட்டக்கூடிய வசனம் எது என்று கேட்குப்படி கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். قُلۡ يَٰعِبَادِيَ ٱلَّذِينَ أَسۡرَفُواْ عَلَىٰٓ أَنفُسِهِمۡ لَا تَقۡنَطُواْ مِن رَّحۡمَةِ ٱللَّهِۚ إِنَّ ٱللَّهَ يَغۡفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًاۚ إِنَّهُۥ هُوَ ٱلۡغَفُورُ ٱلرَّحِيمُ

ஹஸ்ரத் உமர் அவர்கள் இந்த அனைத்து விஷயத்தையும் கேட்ட பிறகு, உங்கள் மத்தியில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் இருக்கின்றார்களா? என்று கேட்குமாறு கூறினார்கள். குழுவைச் சார்ந்தவர்கள், ஏனில்லை. இறைவன் மீது ஆணையாக! அவர்கள் எங்கள் மத்தியில் இருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் வியாழக்கிழமை உரை நிகழ்த்துவார்கள். மாலை நேரத்தில் ஆற்றுகின்ற அந்த உரையில் பொதுவாக அன்னார் நபி (ஸல்) அவர்களது ஏதாவதொரு ஹதீஸை எடுத்துக் கூறுவார்கள். அந்த ஹதீஸை எடுத்துக் கூறும் போது அன்னாரது ஆர்வம் மற்றும் ரஸூலின் மீது கொண்டிருந்த பேரன்பு ஆகியவை பார்ப்பதற்குரிய ஒன்றாகும்.

அன்னாரது மாணவர் மஸ்ரூக் கூறுகின்றார்கள்: ஒரு நாள் அன்னார் எங்களுக்கு நபி (ஸல்) அவர்களது ஒரு ஹதீஸை எடுத்தக் கூறினார்கள். سَمِعتُ رَسُولَ اللهِ அதாவது நான் அல்லாஹ்வின் தூதர் கூறக் கேட்டேன் என்ற வாக்கியத்தை அடைந்த போது அச்சத்தின் காரணமாக அன்னாரது உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. எதுவரை என்றால் அதன் தாக்கமானது அன்னாரது ஆடையிலிருந்தும் உணர முடிந்தது. அவர்கள் ஹதீஸை

எடுத்துக் கூறுவதில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு இறைவன் மீதான அச்சம் எந்த அளவு மேலோங்கி இருந்தது என்றால், அவர்கள் தாம் மரணித்த பிறகு எழுப்பப்பட்டு விடக்கூடாது என்றும் கேள்வி கணக்கிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் நோயுற்றார்கள். மிகுந்த அச்சத்திற்குள்ளானார்கள். நாங்கள் அவர்களிடம், உங்களை நாங்கள் எந்தவொரு நோயிலும் இவ்வாறு அச்சத்திற்குள்ளாகி இருப்பதைப் போன்று பார்த்ததில்லையே என்று கேட்டோம். அதற்கு அவர்கள், இந்த நோய் எனக்கு திடீரென வந்துள்ளது. இப்போது நான் என்னை மறுமையின் பயணத்திற்கு ஆயத்தமானவனாக காணவில்லை. எனவே நான் சங்கடத்தில் இருக்கின்றேன் என்று கூறினார்கள்.

அன்னார் தனது மரணத்தைப் பற்றி எடுத்துக் கூறும் போது, அந்த நாள் எனக்கு எளிதான நாளாக இருக்காது. நான் மரணித்த பிறகு எழுப்பப்படக் கூடாது என்று நான் விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

அவர்களது கஃபன் துணி சாதாரணதாக இருக்க வேண்டும். மேலும் வஃபாத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் அவர்களது கபரின் அருகில் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். அன்னார் ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற இரண்டாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் குதாமா பின் மழ்வூன் ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் அன்னாரது சகோதரர் ஆவார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் போது அவர்களது வயது 19 வயதாகும். இளைஞராக இருக்கும் போதே அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மதீனா ஹிஜ்ரத்தின் போது அன்னாரது முழுக் குடும்பமும் தமது வீடுகளை விட்டு விட்டு மதீனா சென்றது. மதீனாவில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சல்மா அஜ்லானி அவர்கள் இந்த குடும்பத்தை தமது விருந்தினராக ஆக்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் குதாமா அவர்கள் ஆரம்ப காலத்தில் நம்பிக்கை கொண்டவர்களில் ஒருவராவார்கள். ஹப்ஷா மற்றும் மதீனா ஆகிய இரண்டு ஹிஜ்ரத்துகளிலும் அன்னார் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை பெற்றார்கள். ஹஸ்ரத் குதாமா ஹிஜ்ரி 36 ஆம் ஆண்டு தனது 68 வது வயதில் வஃபாத்தானார்கள்.

அல்லாஹ் மார்க்க ஞானத்தைப் பெற்றிருந்த மற்றும் கட்டுப்படுதல் மற்றும் கலப்பற்ற தன்மையில் தம்மை அர்ப்பணித்தவாறு உண்மையான முன்மாதிரியை நிலைநாட்டிய மற்றும் நபி (ஸல்) அவர்கள் மீது உயர்தரமான அன்பை கொண்டிருந்த இந்த சஹாபாக்களின் அடிச்சுவட்டை பின்பற்றி நடப்பதற்கான நற்பாக்கியத்தை நமக்கும் வழங்குவானாக. மேலும் ஒவ்வொரு குழப்பத்திலிருந்து பங்கு பெறுவதிலிருந்தும் நம்மை எப்போதும் பாதுகாப்பானாக.

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா காஹிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவதாக, கராச்சியைச் சார்ந்த மஹ்மூது பட்டி சாஹிப் அவர்களது மனைவியான மதிப்பிற்குரிய அம்மதுல் ஹஃபீழ் பட்டி சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் நீண்ட காலமாக கராச்சியின் சதர் லஜ்னாவாக இருந்துள்ளார்கள். 27 செப்டம்பர் தனது 93 வயது வயதில் அவர்களது மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இரண்டாவது ஜனாஸா, பெல்ஜியத்தின் நேஷனல் செகரட்டரி உமூரே கார்ஜாவான அதுனான் வேனன் பரோக் சாஹிபுடையதாகும். செப்டம்பர் 29 அன்று வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

**மொழியாக்கம்: முஅல்லிம் A.கலீல் அஹ்மது**